மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுது நம்மிடம் உரம் தேங்கியிருக்கிறது. தேவையான உரத்தை கேட்டுக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக போதுமான மழை பெய்யாத காரணத்தினால், உரம் தேங்கி இருக்கிறது நிலைமைதான் இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு எவ்வளவு உரம் வேண்டுமானாலும் அந்தப் பகுதியில் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இப்பொழுது இருக்கிற உரத்தை விற்றால், தமிழக அரசுக்கு அதிக ஆதாயம் ஏற்படும்.

திரு. கே. விநாயகம்: மத்திய சர்க்கார் நமது மாநில சர்க்காருக்கு தேவையான அளவு கெமிகல் பெர்டிலைஸர்ஸ் கேட்ட அளவுக்கு தாராளமாகக் கொடுத்து வருகிறார்கள் என்பது உண்மையா? நாம் தான் வாங்கி இன்னும் போதிய அளவு பயன்படுத்தவில்லை என்பது உண்மையா? நம்முடைய சர்க்காரைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் எந்தவிதமான பாரபட்சமும் காட்டுவதில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி 1966–67-க்கு முன்பிருந்த நிலைமை வேறு, அப்பொழுது இருந்த அரசு கேட்டதில் பாதி அளவு தான் கொடுத்தார்கள். நாங்கள் பொறுப்பேற்ற பிறகு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நமக்குத் தேவையான ரசாயன உரத்தைக் கொடுக்க வேண்டுமென்று முதல் அமைச்சர்கள் மாநாட்டிலும் உணவு அமைச்சர் மாநாட்டிலும் தொடர்ந்து நாம் வற்புறுத்தியதன் விளைவாக நமக்குக் கொடுப்பதை கொஞ்சம் கூடுதலாக்கினார்கள். நம் தேவையை முழுக்க கொடுக்க வில்லை. இந்த நேரத்தில் உரம் தேங்கியிருக்கிறது என்ற கேள்வி வரும்பொழுது, கடந்த இரண்டு ஆண்டு காலமாக மழை பெய்யாத காரணத்தினால் தான் உரம் தேங்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த விஷயத்தில் நாம் மத்திய சர்க்காரை குறை சொல்வதற்கில்லை. தேவையான அளவு கொடுக்கவேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறபொழுது, திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் நமக்கு கொடுக்கவேண்டிய உரத்தை கொடுக்க வேண்டிய அளவில் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். திரு. விநாயகம் அவர்களும் அதை சந்தோஷத்தோடு கேட்டுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

மு.ப. 10.00 [குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(அ) தளவாய்புரம் கிராம அரிசன குத்தகை விவசாயிகள் சாகுபடி செய்த நெல்லை நிலச்சுவான்தார்கள் அறுவடை செய்து அவர்களை நிலத்தை விட்டு வெளியேற்ற முயற்சித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி அவர்கள், ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, "நெல்லை மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தாலுகா, தளவாய்புரம் கிராம அரிசன குத்தகை விவசாயிகள் சாகுபடி செய்த நெல்லை, நிலச்சுவான்தார்கள் வன்முறையில் அறுவடை செய்து கொண்டு அரிசன ஏழை விவசாயிகளை நிலத்தைவிட்டும் வெளியேற்ற முயற்சிப்பதால், இவ்வட்டாரத்தில் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது அரசு அவசர நடவடிக்கை எடுத்து, நில வெளியேற்றத்தைத் தடுத்து, சாகுபடியாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று விவாதிக்க, பேரவையில் இன்றைய மற்ற நடவடிக்கைகளை ஒற்றிவைக்கக் கேட்டுக்கொள்கிறேன்" என்ற தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

இது அரசினுடைய அன்றாட நிகழ்ச்சிக்குட்பட்டது என்பதாலும், இன்றைக்கு நிதி ஒதுக்க மசோதாவின்மேல் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு இருக்கிறது என்பதாலும், இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி வழங்க மறுக்கிறேன்.